# அஷ்ட லக்ஷ்மி

அஷ்ட லக்ஷ்மியாய் விளங்கிடும் திருமகளேயெம்,
இஷ்டங்கள் நிறைவேறிட நீயும் அருள்புரிவாயே !
நாதியற்ற மக்களை ஓடிவந்து காப்பவளே,
ஆதிலக்ஷ்மியாக இருந்தெம்மை காப்பாயே ;
சத்தான குழந்தைகளை நாமும் பெற்றிடவே,
சந்தானலக்ஷ்மியை நாளும் போற்றிடுவோம் ;
கஜேந்திரனின் குரல்கேட்டு குறைதீர்த்தவளே,
கஜலக்ஷ்மியாக இருந்து எம்குறைதீர்ப்பாயே ;
தனங்கள் எம் இல்லங்களில் நிறைந்திவதற்கு,
தனலக்ஷ்மியை இதயங்களில் நினைத்திடுவோம் ;
தான்யங்கள் விளைந்து நம் நாடு செழித்திடவே,
தான்யலக்ஷ்மியை நாளும் நாம்வழிபடுவோம் ;
விஜயங்கள் நம் செயல்களில் விளைந்திடவே,
விஜயலக்ஷ்மியை நாமும் வணங்கிடுவோம் ;
மஹாவிஷ்ணுவின் மார்பில் தங்கியிருப்பவளை,
மஹாலக்ஷ்மியாக இருவேளை தொழுதிடுவோம் ;
வீரமும், தீரமும் வாழ்வினில் நாம் பெற்றிடவே,
வீரலக்ஷ்மியை நாமும் போற்றி பணிந்திடுவோம் !